5. அறிவிப்பு

மானியக் கோரிக்கைகள், 2018-2019, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2018-2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மாண்புமிகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2018-2019."

6. மானியக் கோரிக்கைகள், 2018-2019, விவாதமும் வாக்கெடுப்பும்

(அ) கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

(ஆ) கோரிக்கை எண் 31-தகவல் தொழில்நுட்பவியல் துறை

(அ) கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2018-2019 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 54-வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை). மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெய்வமாக நம்மை வழிநடத்திச் செல்லும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

"வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.436,59,65,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.163,87,60,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.